விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 265 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 24 திங்கட்கிழமை (09.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Visitor Visa/Tourist Visa/Student Visa/Settlement Visa
UK, Canada, USA, Norway, France, Australia மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் Online மூலம் செய்து தரப்படும். மேலும்
- Online Police Clearance
- Online booking an appointment
- விசா தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கடிதங்கள்
A/L படித்த பெண் பணியாளர்கள் தேவை.
Salary - 35000.00
(323)
Online Visa Advisor
Jaffna, Mannar, Colombo
070 375 0002

## ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற வேண்டும்

### சந்திப்பை அடுத்து மாவை

(மாவிட்டபுரம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வடமாகாண அபிவிருத்தியை உறுதிப்படுத்துவார் எனத் தாம் எதிர்பார்ப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற "இயலும் ஸ்ரீ லங்கா" வெற்றிப் பேரணிகளில் கலந்து கொண்ட பின்னர் மாவிட்டபுரத்திலுள்ள மாவை சேனாதிராஜாவின் 15

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜெனிவா பயணம்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக வடக்குக் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினரின் சங்க பிரதிநிதிகள் நேற்றைய தினம் ஜெனிவாவுக்குச் சென்றுள்ளனர்.

வடக்குக் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினரின் சங்கச் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்த நடராஜா தலைமையில் சங்க உபசெயலாளர் சபிதா ரத்தீஸ்வரன் மற்றும் வவுனியா மாவட்டத் தலைவி சறோஜா சண்முகம் பிள்ளை ஆகியோர் 15

## ◀ ரணில் - அநுர வடக்கில் கருத்து மோதல் ▶

## இனவாதக் கருத்தை விதைக்கிறார் அநுர

### ரணில் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பியின் கொள்கைகளைச் சுமந்து வரும் அநுர குமார திஸாநாயக்க வடக்கு மக்களை அச்சுறுத்தி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதத்தை தூண்டியவர் ரணில்

### அநுர குமார பதிலடி

(கொழும்பு)

தமிழ் மக்களிடம் இனவாதத்தைத் தூண்டியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



(02ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து 3 மி.முட்டைகள்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூன்று மில்லியன் முட்டைகள் எதிர்வரும் வாரத்தில் நாட்டை வந்தடைய உள்ளது.

இதன்பிற்பாடு 40 ரூபாய்க்கு முட்டை வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான 15

## அநுரவின் கருத்தில் இனவாதம் இல்லை

- அவர் இனவாதியுமல்ல
- ரணிலின் கருத்துக்கு சுமந்திரன் மறுப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் இனவாதக் கருத்தைத் தெரிவிக்கவில்லை என தாம் நம்புவதாக பாராளுமன்ற உறுப் 15

## வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்த சாரதி கைது

(மூதூர்)

மூதூர் டிப்போவில் கடமையாற்றும் சாரதி ஒருவர் தபால் வாக்களிப்பு நிலையத்தில் வைத்து 15

## வட்டியில்லாக் கல்விக் கடன்

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வட்டியில்லாக் கல்விக்கடன் திட்டத்தின் கீழ் இவ்வருடம் 7000 மாணவர்களுக்கு கடன் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை இன்று முதல் இம்மாதம் 20ஆம் திகதி 15

## கடலில் சுகவீனமுற்ற மீனவர் உயிரிழப்பு

(புதுக்குடியிருப்பு)

மன்னார் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ஜேசுதாஸன் (வயது-62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் - உதயபுரம் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை 15

## ரணிலுக்கு ஆதரவாக மோ.சைக்கிள் பேரணி

### அறுவர் பொலிஸாரால் கைது

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் சிலிண்டரை ஏற்றிப் பேரணியாகச் செல்ல இருந்த 6 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக் 15

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் நேற்று (08) வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்திற்கு வருகை தந்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடினர். (ந-7)

## தங்க பிஸ்கட்களுடன் இந்திய வர்த்தகர் கட்டுநாயக்கவில் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தங்க பிஸ்கட்களுடன் இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்களை தனது காற்சட்டைப் பையில் மறைத்து வைத்திருந்த நிலையில் குறித்த இந்திய வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ஒரு கிலோ 158 கிராம் எடையுடைய 9 தங்க பிஸ்கட்டுகளும், மேலும் 3 தங்க பிஸ்கட் துண்டுகளும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த சந்தேக நபர் நேற்று முன்தினம் பெங்களூர் செல்லவிருந்த போதே கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் மற்றும் தங்க பிஸ்கட்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-7)

## இனவாதக்...

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அநுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்தது பிரசாரம் செய்த போது, "தெற்கு டிக்கள் மாற்றம் ஒன்றுக்காக ஒன்றுபட்டிருக்கும் போது, வடக்கு மக்கள் அதற்கு மாறான தீர்மானத்தை எடுத்தால் தெற்கு மக்களின் மனோபாவம் எவ்வாறு இருக்கும்" என்று கேட்டிருக்கிறார்.

அப்படிச் சொல்வது வடக்கு மக்களை அச்சுறுத்துவதாகும். 2010 ஆம் ஆண்டில் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு நாங்கள் கூறினோம். மக்கள் வாக்களித்தனர்.

ஆனால் சிங்கள மக்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்தனர். அதற்காக மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாண மக்களை அச்சுறுத்த தெற்கிலிருந்து ஆட்களோடு வரவில்லை.

தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களித்த போது சிங்கள மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை தெரிவு செய்தனர். அப்போதும் கோட்டாபய ராஜபக்ஷ வடக்கு மக்களை அச்சுறுத்த வரவில்லை.

ஆனால், ஜே.வி,பி மக்களை அச்சுறுத்துகிறது. அநுரவிற்கு வெற்றிபெற்ற அனுபவம் இல்லை. அவர் வெல்வதற்கான சாத்தியமும் இல்லை. வடக்கு மக்களின் சட்டரீதியான பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்துவோம்.

எனவே, மக்களை அச்சுறுத்தியதையிட்டு ஜே.வி. பியினர் வெட்கப்பட வேண்டும். அநுர திசாநாயக்க இதற்காக வடக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அதற்காக சிங்கள மக்களைப் பயன்படுத்திக் கொண்டதால் அவர்களிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

தாம், விரும்பியவருக்கு வாக்களிக்கும் உரிமை வடக்கு மக்களுக்கு உண்டு. அந்த உரிமையைப் பாதுகாப்போம். எனவே செப்ரெம்பர் 21 சிலிண்டருக்கு வாக்களிக்காவிட்டால் சிலிண்டரும் இருக்காது அபிவிருத்தியும் வராது." என ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார். (ந-7)

## இனவாதத்தை...

வட பகுதிக்கு விஜயம் செய்த அநுரகுமார திஸாநாயக்க, அங்கு தமிழ் மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களை விதைத்ததுடன் தமிழ் மக்களை அச்சுறுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம்(07) உடுப்பிட்டியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க, நான் இனவாதியல்ல, இனவாதக் கருத்தை நான் தூண்டவும் இல்லை, இன வாதத்தைத் தூண்டும் அரசியல் இப்போது செல்லுபடியாகாது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாதத்தைத் தூண்டியுள்ளார் எனவே, வடக்குத் தமிழ் மக்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

எனது கருத்தின் உண்மைத் தன்மையை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆகையால், ரணில் விக்கிரமசிங்கவே வடக்குத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (ந-7)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 - 03 - 1973

மறைவு 13 - 08 - 2024

### வைத்தீஸ்வரன் ஜெகதீஸ்வரன்

அல்வாயைப் பிறப்பிடமாகவும் குருபரன் வீதி முழங்காவில், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தீஸ்வரன் ஜெகதீஸ்வரன் அவர்கள் 13.08.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்தீஸ்வரன் - சகுந்தலாதேவி தம்பதிகளின் மூத்த மகனும் ஜெ.கமலவதனி அவர்களின் அன்புக் கணவரும் ஜெ.சத்தியஜித், ஜெ.சாயித், காலஞ்சென்ற ஜெ.தசாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் மணீஸ்வரன் (கனடா) அவர்களின் அன்பு அண்ணாவும் குகனேஸ்வரன், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்பு மருமகனும் ச.தவேந்திரன்(பிரான்ஸ்), மு.பிரசன்னா (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகலனும் வாகினி(பிரான்ஸ்), வினோதினி (கரியாலை நாகபடுவான்), வாசன்(க.நா), வீணாகானி(வவுனியா) ஆகியோரின் அன்பு அத்தானும் மைந்தா(கனடா) அவர்களின் அன்பு மச்சானும் வனிதா(க.நா) வின் அன்புச் சகோதரனும் கம்சி, பானுசன் ஆகியோரின் மாமனும் லதுசன், யாழினி, ஜான்சன், யாழினி, சபினவன், நிஷா, கிஷானி, யதுர்சி, டிலக்சி, விஸ்வர்சினி, விஸ்கர்சினி, ஆரியன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் இன்று 09.09.2024 திங்கட்கிழமை (பிரான்ஸ்) நடைபெறும். குருபரன் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 078 9922 (தந்தை)
077 712 5402 (மாமனார்)
+164 798 63541 (தம்பி)
+ 33 6 51 32 67 38 (சகலன்)

குருபரன் வீதி, முழங்காவில். (321) குடும்பத்தினர்

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வடிவேலு பரராசசிங்கம்

மனையின் உறவை மதமாய்ப் போற்றி
தனையே வென்றாள் தவமாய் ஏற்று
நனையும் அன்பில் நால்வர் பெற்று
இனிமை கொண்டார் இல்லம் நிறைந்து

தனமும் குணமும் அறிவும் தந்து
இனமும் சனமும் போற்றச் செய்து
தினமும் குறையா நிறைவைத் தந்து
மனமும் ஆண்டு நிலைத்தாய் நின்று

அரும்பாய் முகிழ்ந்த ஆசை எண்ணம்
கரும்பாய் இனிக்கும் காதல் வண்ணம்
விருந்தாய் அமைந்த நல்ல குடும்பம்
அருந்தாய் மடியில் தந்தாய் அமைத்து

செல்ல மகள்தன் பட்டம் சூடும்
நல்ல செய்தி யதனைக் காண
செல்ல வில்லை என்று துடிக்கும்
வல்ல ஆன்மா படிக்கும் வாழ்த்து

பரந்தாள் பணிய தினந்தான் மடியில்
பரந்தான் நீயும் இருந்தாய் மகிழ்ந்தாய்
வரந்தான் அவனை வலந்தான் வந்தாய்
அருந்தேன் தானோ அவனின் விருந்து

தேகம் மறைந்து திருவாய் மலர்ந்து
ஏகம் எம்முள் பொழுதாய்ப் புலர்ந்து
போகம் நிறைந்து பொங்கும் கருணை
மேகம் பொழிந்து காத்தாய் கனிந்து

அல்வாய் கிழக்கு, அல்வாய். (C-1147) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாளைய
சக்தி
உங்கள்
கையில்

இலங்கை, பங்களாதேஷ், நேபாளத்திலுள்ள எமது மின் உற்பத்தி நிலையங்கள் 894 மெகாவோட் மின் உற்பத்திக்கு பங்காற்றுவதுடன், இப்பிராந்தியத்திலுள்ள வீடுகளுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் வலுவூட்டுகின்றன. மின் உற்பத்தி மற்றும் விநியோகம் முதல் மின்மாற்றிகள் மற்றும் நிலைமாற்றி (switchgear) உற்பத்தி வரையானவை தங்குதடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்கின்றன. இவை உங்கள் உலகின் சீரான ஓட்டத்திற்கு நாம் வழங்கிடும் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

40 வருடகாலமாக ஒட்டுமொத்த இலங்கையர்களது கனவுகளுக்கு வலுவூட்டி ஒளியூட்டினோம், எனவே தெற்காசிய மக்களது கனவை நனவாக்கும் ஆற்றல் எமக்கும் உண்டென்பது வியக்கத்தக்க விடயமல்ல.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து அல்லது www.ltl.lk/ipo ஊடாக தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank

CT CLSA
Commitment. Trust. Continuity

(ஜீ-2417)

LTL HOLDINGS
LIMITED

இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## அமெரிக்கா ஓபன் டென்னிஸ்

# முதன்முறையாக சம்பியன் பட்டம் வென்றார் சபலென்கா



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் முன்னணி வீராங்கனையான பெலாரசின் அரினா சபலென்கா அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் சபலென்கா 7-5, 7-5 என்ற நேர் செட் கணக்கில் ஜெசிகா பெகுலாவை வீழ்த்தி சம் பியன் பட்டம் வென்றார்.

2ஆவது முறையாக அமெரிக்க ஓபனின் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய சபலென்கா தனது முதல் அமெரிக்க ஓபன் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய சப லென்கா அமெரிக்க வீராங்கனை கோகோ காஃப்பியிடம் தோல்வி அடைந்து இரண்டாம் இடத்தைப் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 250 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 200-250 | 200 |
| தக்காளி | 180 | 280 | 230 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 300 | 200 | 200-250 | 200 |
| கோவா | 250 | 280 | 250 | 180 | 300 |
| கரட் | 300 | 320 | 350 | 220 | 320 |
| பூசணி | 80 | 50 | 100 | 60 | 80 |
| புடோல் | 60 | 120 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 250 | 200 | 200 | 200-250 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250-300 | 120-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 250 | 220 | 220 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 80 | 80 | 100 | 70-90 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 100-150 | 300 |
| லீக்ஸ் | 120 | 300 | 320 | 220 | 350 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 400 | 400 | 500 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 250 | 150-200 | 200 |
| போஞ்சி | 350 | 350 | 350 | 200 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 250-300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 100-110 | 80-120 | 100-130 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | -- | 350 |
| முள்ளங்கி | 120 | 120 | 200 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 70 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 50 | 80 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3216

### டனுசிகா

வெண்பொங்கல்ல இருக்கிற பத்து முந்திரியில ஒன்னு கூட நமக்கு வராது



ஆனா முப்பது மிளகும் நமக்கு தான் வரும்.. அது தாங்க நம்ம வாழ்க்கை....

### கவி

பள்ளிப்பருவத்தில் ஆசிரியர் வராத போது உள்ள கொண்டாட்ட மனநிலையை



வளர்ந்த பின் மனேஜர் வராத போது தந்து விடுகிறது.....

### தினேஸ்

ஒரு கூண்டில் சிங்கம் புலியை வைத்துச் சமாளிப்பவர் மாஸ்டர் என்றால்.....



ஒரு வீட்டில் மனைவி அம்மா இருவரையும் வைத்து சமாளிப்பவர் ஹெட்மாஸ்டர்

### மிதுனன்

மனைவி பண்ணுறதிலே கொடுமையானது புருசனுக்கு பயப்படுகிற மாதிரி அவங்க தோழி கிட்ட நடிக்கிறது தான்



அவர் ஏதாவது சொல்லுவாருடி

### மாதுமை

டீச்சர் கேட்காமலே ஹோம் வேர்க் நோட்டை முதல் ஆளாய் டேபிளில் வைக்கும் மாணவனே



பின்னாளில் அலுவலகத்தில் அனைவரையும் போட்டுக் கொடுக்கும் அதிகாரியாக மாறுகிறான்

### வதுசன்

10 வயசுல என்ன பண்ணிட்டு இருந்த..

என் அக்கா கூட ரிமோட்டுக்கு சண்ட போட்டுட்டு இருந்தேன்..

இப்ப...?

f/alwzsmle

எங்க அக்கா மகன் கூட சண்ட போட்டுட்டு இருக்கேன்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆதரவு வழங்காத அமைச்சர்களை விலக்க ஜனாதிபதி முடிவு?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கு ஆதரவு வழங்காத அமைச்சர்கள், பாராளு மன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திலிருந்து வில கிச் செல்லுமாறு அறிவிக் கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க இந்த அறிவித் தலை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் அமைச்சர்கள் மற்றும் கட்சிகளின் கோரிக் கைக்கு அமைய இந்த தீர் மானம் எடுக்கப்பட்டுள் ளது.

இவ்வாறான தீர்மானம் மிக்க தருணத்தில் பெயரள வில் ஆளும் கட்சியில் அமைச்சர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள் அங் கம் வகிப்பதில் பயனில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

ஆளும் கட்சியில் இருந்து கொண்டு கட்சியின் தீர்மா னங்கள் குறித்த விபரங் களை ஏனைய தரப்பின ருடன் பகிர்ந்து கொள்வதாக குறித்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கள் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

எனவே ஆதரவு வழங் காத தரப்பினரை ஆளும் கட்சியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மை யில் நான்கு இராஜாங்க அமைச்சர்கள் பதவி நீக்கப் பட்டிருந்தனர்.

மேலும் சில அமைச் சர்கள் தங்களை பதவி நீக்க வேண்டாம் எனவும் தாங்க ளாகவே இராஜினாமா செய் வதாக தெரி வித்துள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின் றது. (நி)

# எனக்கு 'இயலும் ஸ்ரீ லங்கா' மற்றவர்களுக்கு இயலாதது

## நெல்லியடியில் ஜனாதிபதி ரணில்



(சாவகச்சேரி)

எனக்கு இயலும் ஸ்ரீலங் காவாக இருப்பது அநுர குமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோ ருக்கு இயலாத ஸ்ரீலங் காவாகவே காணப்படுவ தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக் கிழமை பிற்பகல் நெல்லியடி கொலிங்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்பு ரைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித் திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில் இரண்டு வருடங்க ளுக்கு முன் நீங்கள் காஸ் சிலின்டர் வரிசை, எரிபொ ருள் வரிசை மற்றும் மருந்துகளுக்கான வரி சையில் நின்றிருப்பீர்கள். அப்போது ரூபாயின் மதிப்பு வெகுவாக சரிந்தது. 185 ரூபாயாக இருந்த டொலரின் பெறுமதி 370 ரூபாயாக அதிகரித்தது. வியாபாரம், வர்த்தகம் முடக் கப்பட்டது. தொழில் வாய்ப்பு இழக்கப் பட்டது.

மீண்டும் அந்தக் காலம் நோக்கி போக வேண்டுமா? இல்லையெனில் சிறந்த எதிர்காலம் நோக்கிப் பய ணிப்பதா? இது உங்களின் எதிர்காலத்தை தீர்மா னிக்கப் போகும் தேர்தல்.

நாங்கள் ஆட்சியமைக் கும் போது அநுர குமார திசாநாயக்கவோ அல்லது சஜித் பிரேமதாசவோ இருக்கவில்லை. பிரச்சி னைகளுக்கு தீர்வு காண அவர்கள் முன்வரவும் இல்லை. இப்போது அவர்க ளால் பிரச்சினையை தீர்க்க இயலுமா?

கடந்த இரண்டு வருடங் கள் மிகவும் கஷ்டப்பட்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுள்ளோம். அது இலகுவான காலம் அல்ல. அப்போது எனக்கும் சில தீர்மானங்கள் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டது. அதில் ஒன்று தான் வரி அதிகரிப்பு. இதை விட ஓர் சிறந்த எதிர் காலத் திற்காகவே மக்கள் வரி அதிகரிப்பை சமாளித்த னர்.

ஐ.எம்.எப் இடம் சென்ற தன் விளைவால் வரி அதிக ரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கடன்களை பெற்றுக் கொள்வதனைக் குறைத் தோம்.

பணம் அச்சிடுவதனைக் குறைத்தோம். அதன் பலா பலனாக ரூபாய் மதிப்பு பெற் றது. ரூபாயின் பெறுமதி அதிகரித்ததால் பொருட் களின் விலையும் குறைந் தது.

2025 இல் மேலும் வாழ்வாதார செலவுகளைக் குறைப்போம். அதுமாத்திர மன்றி இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது, வரிச் சலுகைகளை வழங்குவது, பொருளாதாரத்தை ஏற்று மதிப் பொருளாதாரமாக பரி மாற்றம் செய்வது என பல திட்டங்களை அடுத்த 5 வரு டங்களில் மேற்கொள்ள வுள்ளோம் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந் தார். (நி-30)

# ரணிலுடன் கைகோர்த்தார் தலதா அத்துகோரல

(கொழும்பு)



அண்மையில் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த தலதா அத்துகோரல எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி நேற்று வெலி மடை நகரில் நடைபெற்று வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொதுக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (நி)

# இராசிபலன்

09.09.2024
ஆவணி 24, திங்கட்கிழமை
சஷ்டி மாலை 6.13 மணிவரை
விசாகம் பிற்பகல் 3.41 மணிவரை

சுபநேரம் 12.04-1.34மணி வரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சஷ்டி விரதம்.

சந்திராஷ்டமம்-
உத்திரட்டாதி. ரேவதி

வளவன்




மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.




தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வாகன சுகமுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.




உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகலாம், குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள்.




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தித்திக்கும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

உன் அன்புக்கும் ஒரு அளவு இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுநாளும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.45 மணியளவில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக செல்லா மண்டபத்தில் நிலைய தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் திருமதி.எம்.ஜீவராணி புனிதா கலந்து கொள்ளவுள்ளார்.

நினைவுப் பேருரையை யாழ்.போதனா வைத்திய சாலை அவசரசிகிச்சைப் பிரிவு மற்றும் விபத்து அவசரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி க.மணிதீபன் ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வலி.தெற்கு பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் வலிகாமம் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஆ.சஞ்சீவன், வட பிராந்திய ஹற்றன் நஷனல் வங்கி பிராந்திய கடன் தலைமை அதிகாரி மகேசன் தயாகரன், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எப்.எம் பிரடவுஸ் ஆகியோருடன் கௌரவ அதிதியாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார். (நி)

## பிரசார கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள்



(வவுனியா)

வவுனியா, குருமன்காடு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் தேர்தல் பிரசார கூட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் வருகை தந்து கண்காணித்து இருந்தனர்.

நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார செயற்பாடுகள் மற்றும் கலந்து கொண்ட மக்களுடைய செயற்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி இருந்தார்கள். அத்துடன் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுடனும் கலந்துரையாடி கூட்டம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொண்டனர். தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அரசியல்வாதிகளாலும் ஜனாதிபதி வேட்பாளராலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பிலும் அவர்கள் குறிப்புக்களை எடுத்துக் கொண்டதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (நி-250)

## அநுரவுக்கு ஆதரவாக கிளிநொச்சியில் பிரசாரம்




(தருமபுரம்)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்காவுக்கு ஆதரவாக தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதி தொழிற்சங்க பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில் பிரசார பணிகளை ஆரம்பித்தனர்.

தொண்டமான் நகரில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி அலுவலகத்திலிருந்து பிரசார பணிகள் ஆரம்பமானது.

குறித்த பிரசார நடவடிக்கையில் தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதி தொழிற்சங்க இணைப்பாளர் சமிர அல்விஸ் உள்ளிட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (நி-316)

## வாக்குச்சீட்டு அச்சிடும் பணி 50 வீதம் நிறைவடைந்தது

(கொழும்பு)

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் வரை நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அச்சிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளை அடுத்த வாரத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 09.09.2024 | மு.ப-9-11 | நெடுக்குளம் தாய்மார் கழகம் |
| | மு.ப-11-1 | வசந்தபுரம் CC சனசமூக நிலையம் |
| | பி.ப-2.30-4 | கொலன் தோட்டம் |
| 10.09.2024 | மு.ப-9-11 | 3 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை |
| | மு.ப-11-1 | 1 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை |
| | பி.ப-2.30-4 | 2 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை |
| 11.09.2024 | மு.ப-9-11 | எழிலூர் சனசமூக நிலையம் |
| | மு.ப-11-1 | 5 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை |
| | பி.ப-2.30-4 | சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம் |
| 12.09.2024 | மு.ப-9-11 | மகேந்திரபுரம் |
| | மு.ப-11-1 | வளன்புரம் |
| | பி.ப-2.30-4 | சென் மேரிரீஸ் கோயில் (AV) |
| 13.09.2024 | மு.ப-9-11 | (AV) வீதி புகையிரத வீதி சந்தி |
| | மு.ப-11-1 | கொழும்புத்துறை விதானையார் லேன் |
| | பி.ப-2.30-4 | பாசையூர் சனசமூக நிலையம் |
| 18.07.2024 | மு.ப-9-11 | ஈச்சமோட்டை. சனசமூக நிலையம் பாசையூர் |
| | மு.ப-11-1 | புதுக்குடியிருப்பு |
| | பி.ப-2.30-4 | பாண்டின் தாழ்வு (புனித அன்னமாள் கோயில் அருகில்) |
| 19.09.2024 | மு.ப-9-11 | வில்வந்தெரு |
| | மு.ப-11-1 | புளியடி சந்தி இலந்தைக்குளம் |
| | பி.ப-2.30-4 | கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் |
| 20.09.2024 | மு.ப-9-11 | விதானையார் லேன் ஈச்சமோட்டை |
| | மு.ப-11-1 | பாசையூர் மகப்பேற்று நிலையம் |
| | பி.ப-2.30-4 | சுண்டிக்குளம் சனசமூக நிலையம் |

(நி)

## வன்முறைக் கும்பலினால் அடித்து உடைத்து தீயிடப்பட்ட வாகனங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கும்பல் ஒன்றினால் வானும் காரும் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

வாகனங்களுக்கு வைக்கப்பட்ட தீயினை அணைக்க முயற்சித்த பெண்ணொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் வீடொன்றின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் மற்றும் கார் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் தாக்குதலை மேற்கொண்டு வாகனங்களுக்கு தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதனைக் கண்ணுற்ற வீட்டார் தீயினை அணைக்க முயன்றனர். அதன் போது வாகன உரிமையாளரின் தாய் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அதனை அடுத்து அவரை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையின் போது ஒலிபெருக்கி மூலம் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம்

## பரீட்சைத் திணைக்களம் அவசர கோரிக்கை

(கொழும்பு)

**செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 12.15 மணி வரை கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் நடத்தப்படும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித ஜயசுந்தர இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2849 பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை நடைபெறவுள்ளதுடன், 3,23,879 பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சீமெந்துக்கான செஸ் வரி குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கு விதிக்கப்பட்ட செஸ் வரி ஒரு கிலோகிராம் ஒன்றிற்கு 1 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வரி குறைப்பு, 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த வரி திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிய மின் இணைப்பிற்கு வரி இலக்கம் கட்டாயம்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

(கொழும்பு)

புதிதாக மின் இணைப்புகளை மேற்கொள்ளும் போது வரி இலக்கத்தை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான முன்மொழிவு இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

வாகனப் பதிவு, வருமான உரிமம் பெறுதல், நடப்புக் கணக்கு தொடங்குதல், நிலம், அசையாச் சொத்து உள்ளிட்ட சொத்துகளைப் பெறுதல் போன்ற வழக்குகளில் வரி இலக்கத்தை பெறுவது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன்படி மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வது தொடர்பான பரிந்துரை நிதித் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# ரணிலின் தேர்தல் கூட்டம் துப்பாக்கி ரவையுடன் சிக்கிய இளைஞன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் கோரகல்லிமடுவில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தரவிருந்த வேளை இளைஞர் ஒருவரை துப்பாக்கி ரவையுடன் கைதுசெய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகரை அம்பந்தனாவெளியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரான் கோரகல்லிமடு விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனினால் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்காக பொதுமக்கள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் வாகனங்களில் கட்சி ஆதரவாளர்களால் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

குறித்த இளைஞனும் இது போன்று வாகரை பிரதேசத்திலிருந்து அழைத்து வரப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் எதுவித குழப்பமின்றி சற்று தாமதித்து நடைபெற்றது.

கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி)

# சஜித்திற்கான ஆதரவு தமிழர்களுக்கான துரோகம்

## அங்கஜன் எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் நிபந்தனைகளின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சுமந்திரன் எவ்விதமான நிபந்தனைகளுமில்லாமல் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்கியுள்ளார். இது தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகமல்லவா?

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் சூழ்ச்சிகளுக்கு தமிழ் மக்கள் அகப்படக்கூடாது. செய்நன்றி மறவாமல் ஜனாதிபதிக்கு மீண்டும் ஆணையளிக்க வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் "இயலும் ஸ்ரீலங்கா" தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் தலைவர்கள் இருந்த போது மக்களுக்காக சவால்களை பொறுப்பேற்பேன் என்று கூறி இரண்டு வருடங்களில் நாட்டை வழமைக்கு கொண்டு வந்துள்ளார் ஜனாதிபதி.

நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்ல நன்றியுள்ளவர்கள். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் இலங்கை சோமாலியாவை போன்று மாறியிருக்கும்.

பொருளாதார மீட்சிக்கு சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டு. அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எழுச்சி பெறுவதா? அல்லது வீழ்ச்சியடைவதா? என்பதை செப்டெம்பர் 21ஆம் திகதி தீர்மானிக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கை தமிழரசுக் கட்சி வேடிக்கையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் ஒரு தரப்பினர் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியுள்ள நிலையில். பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விரைவாக சென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகள் எம்மிடம் என்ற மாயையில் இருந்துக் கொண்டு செயற்படும் இவர்கள் தமிழர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். தமிழர்கள் இந்த சூழ்ச்சியில் அகப்பட மாட்டார்கள். யார் உண்மையானவர்கள் என்பதை தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

ஜனாதிபதியை இனவாதி என்று குறிப்பிடுகிறார்கள். நல்லாட்சியில் அவர் தமிழர்களுக்கு செய்த அபிவிருத்திகளை மக்கள் நன்கு அறிவார்கள். வடக்கில் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் தொடர்வோம் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# மணிப்பூரில் மீண்டும் வெடித்தது வன்முறை!

## ஐவர் உயிரிழப்பு



(டில்லி)
மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வன் முறைச் சம்பவத்தில் பொது மக்களில் ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி குகி ஸோ பழங் குடியினர் மற்றும் மைத் தேயி சமூகங்களுக்கு இடை யில் ஏற்பட்ட இனக்கலவரம் ஓராண்டுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்தநிலையில் குறித்த மோதல் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

போராட்டக்காரர்கள் இந்த முறை ட்ரோன்கள், ரொக்கெட்கள் போன்ற நவீனத் தொழில்நுட்பங்களை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதனால் மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய வன்முறையில் 5 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சீனாவை உலுக்கிய 'யாகி'

## ❖ இருவர் உயிரிழப்பு
## ❖ 92 பேர் காயம்



(பீஜிங்)
சீனாவின் ஹைனான் பகுதியில் இந்த ஆண்டு ஆசியாவை தாக்கிய மிக வலிமையான யாகி சூறாவளி காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், மின்னல், மழை மற்றும் பலத்த காற்று காரணமாக 92 பேர் காயமடைந்துள்ளனர்.

யாகி புயல் மணிக்கு 234 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்துள்ளது. இதனால், மரங்கள் விழுந்து, வீதிகள் தண்ணீரில் மூழ்கி, 8 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்த 4 இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ரயில்கள், படகுகள், வானூர்திகள் என்பன வற்றின் சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தவிர தென் பிராந்தியத்தை அண்மித்த பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. நேற்று முதல் அனைத்து சுற்றுலாத் தலங்களையும் மூடும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தவிர உலகின் மிக நீளமான ஹொங்கொங்கை இணைக்கும் பாலமும் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் , யாகி சூறாவளியானது வியட்நாமின் வடக்கு பகுதியை மணிக்கு 149 கிலோமீற்றர் வேகத்தில் கடக்கவுள்ளது.

குறித்த பகுதியில் நிலச்சரிவு மற்றும் பல அனர்த்தங்கள் நேரக்கூடும் என வானிலை ஆய்வு மையம் பொது மக்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் உயிரிழப்புகளும் அதிகமாகப் பதிவாகக்கூடும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்யா செல்கிறார் அஜித் டோவல்

## ரஷ்ய–உக்ரைன் போரில் திருப்பம் ஏற்பட வாய்ப்பு



(டில்லி)
இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்த வாரம் ரஷ்யா செல்லவுள்ள நிலையில் இந்தியாவின் உதவியுடன் ரஷ்யா - உக்ரைன் அமைதிப்பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவுடன் மிகவும் நெருங்கிய நட்பு நாடாக உள்ள இந்தியா, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர மத்தியஸ்தம் செய்யலாம் என ரஷ்யா ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளதோடு, இதே கருத்தை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் தெரிவித்தார்.

இரு நாட்டு ஜனாதிபதிகளுடனும் இந்தியாவுக்கும், பிரதமர் மோடிக்கும் நல்லுறவு உள்ள நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வர இந்தியாவின் முன்முயற்சியை உலகமே எதிர்பார்க்கிறது.

இந்நிலையில், அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் விதமாக, இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் டோவல், இந்த வாரத்தில் ரஷ்யா செல்லவுள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டுக்காக செல்லும் அவர், ரஷ்யா மற்றும் சீனா நாடுகளின் உயர் அதிகாரிகள், அமைச்சர்களுடன் பேச்சு நடத்துகிறார். இதன் மூலம் ரஷ்யா - உக்ரைன் போரில் திருப்பம் ஏற்பட வாய்ப்பு உருவாகியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (நி)

# உக்ரைனின் தாக்குதலில் ப
# ரஷ்ய ஆயுத களஞ்சி

## ரஷ்யாவில் அவசரநிலை



(மொஸ்கோ)
ரஷ்ய இராணுவத்தின் ஆயுத களஞ்சியசாலை ஒன்றின் மீது உக்ரைன் ஆளில்லா விமானம் நடத்திய துல்லியமான தாக்குதலில் அந்தக் களஞ்சியசாலை பற்றியெரிவதுடன் அப்பகுதி மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். அத்துடன் ரஷ்யாவின் மாகாணத்தில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் ஆயுத களஞ்சியசாலை ஒன்றின் மீதே அதிகாலை 3 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து ஆயுதக் களஞ்சிய சாலை வெடித்து சிதறி தீப்பற்றி எரியத் தொடங்கியது.

இதனையடுத்து மாகாணத்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதுடன் அங்குள்ள நூற்றுக்கணக்கான பொதுமக்கள் 50 மைல் தொலைவிலுள்ள வேறொரு பாதுகாப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# உக்ரைன் மீது உக்கிர தாக்குதல்!

## ❖50 பேர் உயிரிழப்பு
## ❖300 பேர் படுகாயம்



(கீவ்)

**ரஷ்யாவின் ஆயுதக்களஞ்சியங்கள் மீது உக்ரைன் வான் தாக்குதலை மேற்கொண்டது. இதில் கணிசமான சொத்து இழப்புகள் ஏற்பட்டன. இதற்கான பதிலடியாக உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. இதில் 50 பேர் உயிரிழந்ததுடன் 300 பேர் படுகாயமடைந்தனர்.**

உக்ரைன் - ரஷ்யா இடையே யான போர் 925 நாட்களாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளதோடு உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார். ஆனால், பேச்சுவார்த்தை தொடர்பாக உக்ரைன் இதுவரை எந்த வித அறிவிப்பும் வெளியிடவில்லை. அதேவேளை, இருநாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில் உக்ரைனின் பொல்டோவா மாகாணத்தில் உள்ள இராணுவ பயிற்சி மையம் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர். மேலும் 300 பேர் படுகாயமடைந்தனர்.(நி)

## ...ம பற்றியெரியும் ...ந்சியசாலை
### ...லை பிரகடனம்



...இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள், தற்காலிக தங்கும் மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலை அடுத்து ஏற்பட்ட சேதம் தொடர்பில் தகவல் எதுவும் தெரியவரவில்லை. (நி)

# மத வன்முறைக்கு எதிராக ஒன்றுபட வேண்டும்
## போப் பிரான்சிஸ் அழைப்பு

(ஜகர்த்தா)

கத்தோலிக்க திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள இந்தோனேசியா, கிழக்கு தைமூர், பப்புவா நியூ கினியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு 12 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதல் கட்டமாகப் போப் பிரான்சிஸ் கடந்த வெள்ளிக்கிழமை இந்தோனேசியா சென்றிருந்தார்.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் இந்தோனேசியாவுக்கு போப்பாண்டவர் சுற்றுப்பயணம் மேற்கொள்வது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணமாகக் கருதப்படுகிறது.



இந்தோனேசியா சென்றடைந்த போப்பாண்டவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜகர்த்தாவில் உள்ள ஜனாதிபதி மாளிகை சென்ற போப் பிரான்சிஸ் ஜனாதிபதி ஜோகோ விடோடோவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்நிலையில் ஜகர்த்தாவில் உள்ள தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய மசூதியான இஸ்திக்லால் மசூதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்போது போப் பிரான்சிஸ் மற்றும் இஸ்திக்லால் மசூதியின் இமாம் நசருதீன் உமர் இருவரும், மத வன்முறைக்கு எதிராக ஒன்றுபட வேண்டும் என அழைப்பு விடுத்தனர்.

முன்னதாக, போப் பாண்டவர் வருகையை முன்னிட்டு பயங்கரவாத தடுப்பு அதிகாரிகள் தலைநகர் ஜகர்த்தாவின் புறநகர் பகுதிகளில் அதிரடிச் சோதனையில் ஈடுபட்டனர்.

இதில் சந்தேகத்தின் பேரில் 7 பேரை அதிகாரிகள் கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் போப்பாண்டவர் பயணத்தை சீர்குலைக்கவும் அவர்மீது தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டு தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய சத்திரசிகிச்சை காத்திருப்புப் பட்டியலில் ஐயாயிரம் நோயாளிகள்

(கொழும்பு)

இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஐயாயிரம் நோயாளிகள் 2028 ஆம் ஆண்டு வரை காத்திருப்புப் பட்டியலில் உள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஐந்து பிரதான விடுதிகளில் இருதயசத்திர சிகிச்சை நிபுணர்களினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த சத்திரசிகிச்சைகள் தாமதமாவதால் பல நோயாளிகள் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதய அறுவை சிகிச்சைக்காக தற்போதுள்ள வரிசையை முடிவுக்கு கொண்டு வர குறைந்தது நான்கு ஆண்டுகள் ஆகும் என்றும் இதுபோன்று நேரம் கடந்தால், பல நோயாளிகள் உயிரிழக்க நேரிடும் என்றும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் இதய நோயாளிகள் அறுவை சிகிச்சைக்காக தனியாருக்குச் செல்லும்போது பெரும் தொகையை செலுத்த வேண்டியிருப்பதால் காத்திருப்போர் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் தேவைப்படுபவர்களுக்கு அரசு உதவி வழங்க வேண்டும் என்றும் வைத்தியர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இல்லா விடின் விசேட நோய்களுக்கு செல்லுபடியாகும் வகையில் வைத்திய காப்புறுதி முறையை மக்களுக்கு அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாக இருக்கும் எனவும் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார். (நி)

# தேர்தல் வன்முறைகள் குறைவு தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

**(கொழும்பு)**

**2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடும் போது தேர்தல் வன்முறைகள் 43 வீதத்தினால் குறைவடைந்து காணப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரி**

ஜீலை 31 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை 2460 தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் ( 2387) தேர்தல் சட்ட மீறல்கள் என்ற வகைக்குள் அடங்குகின்றன.

11 முறைப் பாடுகளை மாத்திரம் வன் முறைகளெனக் குறிப் பிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தேர்தல் வன்முறைகள் 43. 7 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது.2019 இல் தேர்தல் சட்டமீறல்கள் 4234 ஆக காணப்பட்டன, இம்முறை இதுவரை 2387 ஆக பதிவாகியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந் துளன. 11 சம்பவங்கள் மாத்திரம் பதிவாகியுள்ளன, 2019 இல் 34 சம்பவங்கள் காணப்பட்டன என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித் துள்ளார். (நி)

# வாக்கு பெட்டிகளுக்கு உச்ச பாதுகாப்பு ஆயுதம் தரித்த பொலிஸார் கடமையில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் வாக்குப்பெட்டிகளை எடுத்துச் செல்லும் போது உச்சளவு பாதுகாப்பு வழங்கப்பட உள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தேர்தல் காரியாலயம் இது தொடர்பிலான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

வாக்குப்பெட்டி எடுத்துச் செல்லும் வாகனம் மற்றும் தேர்தல் அதிகாரிகளின் பாதுகாப்பிற்கு ஆயுதம் தரித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்த வாகனங்களின் முன்னாலும் பின்னாலும் பொலிஸ் வாகனங்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாதுகாப்பு நடவடிக்கைக்கு விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இன்று ஒரு தகவல் 223



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சாமர்த்தியம்

பாட்டு எழுதுபவர்களுக்கு எல்லாம் பாட்டு எழுதுகின்ற சாமர்த்தியம் மட்டும் இருந்தால் போதாது. பரிசு வாங்குகின்ற சாமர்த்தியமும் இருக்க வேண்டும். அந்தக் காலத்திலேயே பல பேரிடம் இது இருந்தது! சுலபமாக பரிசு கொடுத்து விடவேண்டும் என்று யாரும் நினைக்கிறது இல்லை. நாம தான் கொஞ்சம் முயற்சி செய்து அதை வாங்க வேண்டியிருக்கிறது. மாலை போடுவதற்கு ஒருவர் வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவராக வந்து கழுத்திலே போடுவார் என்று காத்துக் கொண்டிருப்பதை விட நாம் அதை வாங்கி நமது கழுத்திலே போடுவது தான் இந்தக் காலத்திற்கு நல்லது. இல்லை என்றால் கடைசி நிமிடத்திலே அவர் மனது மாறிப் போய்விட்டார் என்றால் என்ன செய்வது?

அதனாலே இது மாதிரி ரிஸ்க் எல்லாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்தக் காலத்திலே கொடுக்கின்ற மனதுள்ள அரசர்களும் நிறையப் பேர் இருந்தார்கள். வருபவர்களை எப்படி ஏமாற்றலாம் என்று கணக்குப் போட்ட மன்னர்களும் சில பேர் இருந்தார்கள். ஒரு அரசன் இருந்தான். மகா கஞ்சப் பிரபு. கொடுக்கிறது என்றால் ரொம்பக் கஷ்ரப்படுவான். ஆனால் அவனிடம் ஒரு சாமர்த்தியம் இருந்தது. அதாவது அவன் ஒரு ஏகசந்த கிரஹி அப்படி என்றால் என்ன அர்த்தம் என்றால்.அவன் ஒரு தடவை ஒரு பாட்டை கேட்டுவிட்டான் என்றால் அப்படியே வரி மாறாமல் திருப்பிச் சொல்லி விடுவான்.அந்த அரசனிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் எப்படி என்றால் அவன் ஒரு துவி சந்த கிரஹி. அதாவது இவன் எதையும் இரண்டு தடவை கேட்டுவிட்டான் என்றால் அப்படியே திருப்பிச் சொல்லி விடுவான்.

அங்கே ஒரு வேலைக்காரியும் இருந்தாள் அரண்மனையிலே! அவள் எப்படி என்றால் திரி சந்த கிரஹி மூன்று தடவை கேட்டுவிட்டால் திருப்பிச் சொல்லிவிடுவாள். இந்த மூன்று பேரும் சேர்ந்து கொண்டு வருகின்ற புலவர்களை எல்லாம் படாதபாடு படுத்திக்கொண்டு இருந்தார்கள்.யாராவது ஒரு புலவர் ஒரு பாட்டை பாடிக் கொண்டு பரிசு வாங்குவதற்காக வருகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அந்த அரசன் என்ன சொல்லுவான் தெரியுமா? இதோ பாருப்பா... நீ எழுதிக் கொண்டு வந்திருக்கின்ற பாட்டு நீயே சொந்தமா எழுதினதாக இருந்தால் அந்தப் பாட்டு எழுதியிருக்கின்ற ஏடு எவ்வளவு எடை இருக்கிறதோ அந்த அளவுக்கு பொன் தருவேன். அப்படி இல்லை என்றால் ஒன்றும் கொடுக்க மாட்டேன். அதுமட்டுமில்லை. உன்னிடம் இருக்கிறதையும் எடுத்துக் கொண்டு தான் விடுவேன் என்றான். இந்த கன்டிஷனோடதான் புலவர்களைப் பாடச் சொல்லுவான். புலவர் பாடுவார்.பாடி முடிச்சவுடனே அந்த அரசன். ஆகா! இந்தப் பாட்டு மிகவும் அருமையாக இருக்கிறது ஆனால் இதற்கு முன்னாடியே ஒருவர் இதைப் பாடியிருக்கிறார். நான் கேட்டு இருக்கிறேன் என்பான்.

புலவர் அதிர்ச்சியாகி நிற்பார். அந்த அரசன் ஏகச ந்த கிரஹி ஆச்சே அதனாலே உடனே அந்தப் பாட்டை வரி மாறாமல் திருப்பிச் சொல்லுவான். சொல்லிவிட்டு இது மட்டுமில்லை இந்தப் பாட்டு என்னுடைய வேலைக்காரிக்கு கூடத் தெரியும் என்பான். உடனே வேலைக்காரனைக் கூப்பிட்டுப் பாடச் சொல்லுவான். அவன் தான் இரண்டு தரம் கேட்டு விட்டால் திருப்பிச் சொல்லிவிடுவானே. வந்து நின்று கடகட என்று ஒப்பித்து விடுவான். என்னோட வேலைக்காரிக்கும் இந்தப் பாட்டுத் தெரியும் என்பான் அரசன். அவள் ஒரு திரை மறைவிலே ஒளிந்திருந்து மூன்று தடவை பாட்டை கேட்டிருப்பாள். அதனாலே தயக்கமில்லமல் முன்னாடி வந்து நின்று அந்தப் பாட்டை பாடிக்காட்டுவாள். புலவர் அதிர்ச்சியாகி நின்று கொண்டிருப்பார். என்ன புலவரே! பழைய பாட்டைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? என்று சத்தம் போட்டுக் கொண்டு....

அந்தப் புலவர் ஏதாவது கொண்டு வந்திருந்தால் அதையும் பறித்துக் கொண்டு விரட்டி விட்டு விடுவான் அந்த மன்னன். இப்படியே ரொம்பக் காலம் நடந்து கொண்டிருந்தது. ஒரு சாமர்த்தியமான புலவர் இதைக் கேள்விப்பட்டார். என்ன வழி என்று யோசித்தார். உடனே ஒரு பெரிய கவிதையை எழுதினார். முடுகு சந்தம் மிகவும் கரடுமுரடான அமைப்பு. நூறு தரம் சொன்னாலும் மனதிலே பதியாது அப்பேற்பட்ட பாட்டை எழுதி தயார் செய்து கொண்டார். ஒரு இரட்டை மாட்டு வண்டியிலே வந்து அரண்மனை வாசலிலே இறங்கினார். மன்னரைப் பார்த்து வணங்கினார். மன்னன் கன்டிஷனைச் சொன்னான்.பாட்டு உம்முடைய சொந்தப் பாட்டாக இருந்தால் அந்தப் பாட்டை எதிலே எழுதியிருக்கிறாயோ அதை அப்படியே எடை போட்டு அந்த அளவுக்கு பொன் தருவேன். அது பழைய பாட்டாக இருந்து விட்டால் உம்மிடம் இருக்கிறதையும் வாங்கி விட்டுத்தான் விடுவேன் என்றான். புலவர் சரி என்று ஒத்துக் கொண்டார். பாடினார். மிகவும் கடுமையான சந்தம் உள்ள அந்த முடுகு கவியை மன்னனாலே மனதிலே வாங்கிக் கொள்ள முடியவில்லை. திகைத்துப்போய் நின்றுவிட்டார். திருதிரு என்று முழித்துக்கொண்டே வேலைக் காரனைப் பார்த்தார் . அவன் இதைவிட அதிகமா முழித்துக் கொண்டு இருந்தான். வேலைக்காரி பார்த்தா நம்மாலே முடியாது என்று சொல்லி நழுவிப் போய் விட்டாள். வேறு வழியில்லை.

புலவரே இது உங்களுடைய சொந்தப்பாட்டுத் தான் ஒத்துக்கொள்கின்றோம். ஏட்டைக் கொடுங்கள் எடை போட்டு பரிசு தருகின்றோம் என்றான் மன்னன். மன்னா ஏடு வண்டியிலே இருக்கிறது அதை இறக்கி எடுத்துக் கொண்டு வருவதற்கு ஒரு பத்து ஆள் வேண்டும். பத்து பேரும் பலசாலியாக இருக்க வேண்டும் என்றார் புலவர். அரசனுக்கு அதிர்ச்சி என்னது ஒரு பனை ஓலைக் கட்டை தூக்குவதற்கு பத்துப் பேரா? என்றான்.

மன்னா நான் இந்தப் பாட்டை பாடினபோது பக்கத்திலே பனை ஏடு எதுவும் கிடைக்கவில்லை ஒரு பத்து சதுர அடி அளவிலே கருங்கல் ஒன்று இருந்தது. அதிலே எழுதிவிட்டேன். உன் புகழ் என்றைக்கும் அழியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஆழமாகவே செதுக்கி விட்டேன் என்றார்.

வேறு வழியில்லாமல் அதை தூக்கிக் கொண்டு வந்து எடை போட்டு பார்த்து விட்டு பொக்கிஷத்திலே இருந்த பொற்காசையெல்லாம் கொடுத்து அனுப்பி வைத்து விட்டான் மன்னன். என்ன செய்வது. இது தான் பரிசு வாங்குகின்ற சாமர்த்தியம்.

இந்தக் கதையை கேட்டுவிட்டு இந்தக் காலத்து கவிஞர் ஒருவர் மிகவும் ஏக்கமான ஒரு விடயத்தைச் சொன்னார். கருங்கல்லிலே எழுதினாத்தான் எடை அதிகமா இருக்கும் என்று இல்லை சார். நான் என்னோட கவிதையெல்லாம் வெறும் காகிதத்திலே தான் எழுதி வைத்திருந்தேன் அதை எடை போட்டுக் கொண்டால் கூட அந்தக் கருங்கல் அளவிற்கு இருக்கும் என்றார். எடைக்கு எடை ஏதாவது வாங்குவது தானே என்றான். அதுதான் பார்க்கிறேன். அந்த ஆள் கொஞ்ச நாளாக வரவேயில்லை என்றார். யாரு என்று கேட்டேன். பேரீச்சம்பழக் கடைக்காரர் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பான்ட்' இசைப்போட்டி மன்/ புனித சவேரியார் கல்லூரி முதலிடம்




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இடையிலான பான்ட் இசை போட்டியானது இராணுவத்தின் 54 காலாட்படையின் ஏற்பாட்டில் மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றது

குறித்த போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகள் கலந்து கொண்ட நிலையில் பல்வேறு தகைமையின் அடிப்படையிலும் பிரிவுகளிலும் போட்டிகள் இடம்பெற்றது

போட்டிகளில் மதிப்பெண்களின் அடிப்படையில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி பான்ட் அணியினர் மாவட்ட ரீதியாக முதலிடத்தை பெற்று கொண்டனர். அதே நேரம் மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி இரண்டாம் இடத்தையும் மன்/ வெள்ளாங்குளம் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்று கொண்ட அணியினருக்கு இராணுவத்தினரால் வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (நி-285)

# சட்டவிரோத மணல் கடத்தல்

## 6 டிப்பர்களுடன் சாரதிகளும் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணிப்பதாக அன்று தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக் கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்று முன்தினம் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸாரால் 6 டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய் யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களை நீதி மன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி பி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு

## இரு சிறப்பு விருதுகள்



(மன்னார்)

உலக சுகாதார நிறுவனத்தினால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதார தரம் மற்றும் பாதுகாப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இரு சிறப்பு விருதுகள் கிடைத்துள்ளன. இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் அலோகா சிங்கா, சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனீபா விருதுகளை பெற்றுக் கொண்டார். (நி-285)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மாதுளம்பழம்

**Botanical Name- Punica granatum**
**family- Punicaceae**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

எமது பிரதேசத்திற்குரிய பழம். விதைகளோடு இருக்கின்ற பழங்களில் நிறைய மருத்துவ குணங்கள் உண்டு.

குழந்தைகள் முதல் பெரியோர் வரை மாதுளம்பழம் சாப்பிடலாம். மாதுளம்பழத்தில் உயிர்ச்சத்து A,C பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்துக்கள் அதிகமாக உண்டு. மூட்டு வாதம், மூட்டுத் தேய்மானம் உடையவர்கள் மாதுளம்பழம் சாப்பிடலாம். இதனை இன்றைய ஆய்வுகள் கூட நிரூபித்துள்ளன. மாதுளம்பழத்தில் காணப்படும். Bioflavonol எனும் இரசாயன பதார்த்தம் மூட்டுக்களில் ஏற்படும வீக்கம் மற்றும் மூட்டுத் தேய்மானத்தால் மூட்டுக்களில் ஏற்படும் வலியைக் குறைக்கின்றது.

மற்றும் மாதுளம்பழத்தில் காணப்படும் ஒமேகா ஐந்து கொழுப்பமிலம் புற்று நோய்க் கலங்கள் மேலும் வளராமல் தடுக்கவும் உதவுகிறது. மாதுளம் பழத்தில் காணப்படும் பொலிபினோல் மூளையைப் பலப்படுத்துகிறது.

அத்துடன் ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்கிறது. மாதுளம்பழம் தொடர்ந்து சாப்பிட்டு வரும் போது இதய நோய் அபாயத்தை குறைக்கிறது . புற்று நோய் அபாயத்தையும் குறைக்கிறது. கொலஸ்ரோலையும் குறைக்கக் கூடியது. எடையைக் கட்டப்படுத்த உதவும். உடல் கலங்களின் சேதத்தை எதிர்த்து போராட உதவுகிறது. சிறுநீரகக் கற்களை கரைக்க உதவுகிறது. கல்லீரலின் ஆரோக்கியத்தை பராமரிக்கிறது. செரிமானத்தை ஊக்குவிக்கிறது. குறைந்த



இரத்த அழுத்தத்திற்கு உதவுகிறது. மாதுளம்பழம் இனிப்பு சுவையையும் தட்பமான வீரியமும் இனிப்பு விபாகத்தையும் கொண்டுள்ளது.

மாதுளம்பழச்சாற்றில் கல்லாக்காரம் அல்லது கற்கண்டு சேர்த்து மணப்பாகு போல் தயார் செய்து அருந்தி வர காய்ச்சல், காய்ச்சலால் ஏற்படும் உடற் பலவீனம், எரிவு, தாகம், இவற்றை தணிக்கக் கூடியது.

வாய்ப்புண்ணை ஆற்றுவதில் மாதுளம்பழச்சாறு சிறந்தது. உடற்பயிற்சி செய்வதற்கு முன்னர் ஒரு கை பிடி அளவு மாதுளம்பழங்களை சாப்பிட்டால் இரத்த ஓட்டம் சீராகும். அத்துடன் உடற்பயிற்சி செய்வதற்கான ஆற்றலும் கிடைக்கும். மாது ளையிலுள்ள எல்லஜிக் அமிலம் கூரிய வெப்பத்தால் தோல்களில் ஏற்படும் கருமை யையும் தோல்புற்று நோயை யும் தடுக்கும். மாதுளம் பழச் சாறு அருந்துவதால் தலை முடியின் வேர்களை உறுதிப் படுத்தும். தலையில் இரத்த ஓட்டத்தை சீராக்கி முடி வளர்ச்சியைத் தூண்டும்.

மாது ளம்பழம் தினமும் சாப்பிட்டுவர மூளையில் உள்ள நரம்பியல் கடத்திகள் இயற்கையாகவே தன் சக்திகளை அதிகரித்து மூளையை சுறு சுறுப்பாக்கும்.

மாதுளம் பழச்சாற்றை முட்டை கோவா சாறுடன் கலந்து தினமும்200 மில்லி அளவு அருந்திவர குடற்புண்ணை முற்றாக குணமாக்கும். மாதுளம் பழச்சாறு 50 மில்லி, புதினா இலைச்சாறு 50 மில்லி அளவு கலந்து தினமும் பருகி வர பற்களில் மறைந் திருக்கும். கண்ணுக்கு தெரியாத கிருமிகளை அழிக்கின்றது. கரட் பாதிபச்சையாக சாப்பிட்டு, பின்பு மாதுளம் பழச்சாறு அருந்தி வந்தால் நோய் எதிர்ப் பாற்றல் அதிகரிக்கும். வெறும் வயிற்றில் மாது ளம் பழச்சாறு 200-300 மில்லி அருந்திவர செரிமானப் பிரச்சினைகள் சீராகும். மாதுளம்பழத்தை வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிடும் போது பற்களிலுள்ள கிருமிகள் நீங்கி வாய்த்துர்நாற்றமும் நீங்கி பற்களிற்கு சிறிது வெண்மையையும் கொடுக்கும். ஆகவே பற்களின் ஆரோக்கியம் மேம்படும். அத்துடன் பழங்களை கடித்து சாப்பிடும் போது அத னுடைய சத்துக்கள் அனைத்தும் உறிஞ்சிய பின்பு சக்கையிலுள்ள நார்ச் சத்துக்களை பெருங் குடலிலுள்ள நல்ல பக்ரீரியாக்கள் அதனைச் சாப்பிட்டு பெருகும்.

இதனால் குடலில் ஏற்படும் நமைச்சலை அல்லது தாபிதத்தை குறைக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் செரிமானம் சீராக நடை பெறும். அத்துடன் பழச் சக்கையிலுள்ள நார்ச்சத்து மலக்கட்டு வராமலும் தடுக்கக் கூடியதாக இருக் கும். மாதுளம்பழத்தை சாப்பிடும் போது இரத்தக் குழாய்களிலுள்ள நைட்றிக் ஒக்சயிட்டு எனும் இரசாயனச்சத்து அதிகமாகும். இது இரத்தக்குழாய்களை விரிவடையச் செய்யும்.

இதனால் அதிகரித்த இரத்த அழுத்தம் குறைவடையும். மாதுளம்பழத் தில் போலிக்கமிலம் அதி கமாக இருப்பதால் நரம்பு மண்டலம் சீராக தொழிற்பட உதவும். மாதுளம்பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து "C" காணப்படுவதால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

எனவே நோய்வாய்ப் பட்டு இருக்கும் சமயத்தில் மாதுளம்பழச்சாறு சிறந்த பலனைக் கொடுக்கும்

சித்தமருத்துவ முறைப் படி ஊர் மாதுளம்பழங் களிற்குத்தான் அதிகளவு மருத்துவப் பண்புகள் உண்டு. பழச்சாறாக எடுப் பதை விட மென்று சாப்பிடும் போது அதிக பயன்களை பெறக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 575





பின்னால் ஒருவன் காவல் புரிந்துகொண்டு வந்தான். நடுவில் ஒரு சுந்தர புருஷர் வடிவத்தில் மன்மதனை யொத்த ராஜகுமாரர் வந்து கொண்டிருந்தார். தீவர்த்தியின் வெளிச்சம் அந்த நிலவறையின் மூலை முடுக்குகளில் பரவியபோது அங்கேயெல்லாம் பொன்னும், மணியும், வைடூரியங்களும் ஜொலிப்பதுபோலத் தோன்றியது. அது மன்னாதி மன்னர்களில் இரகசியப் பொக்கிஷங்களை வைக்கும் நிலவறையாக இருக்கலாம் என்று தோன்றியது. தூண்களில் கோரமான பூத வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அத்தகைய சுரங்க வழியில் வந்துகொண்டிருந்த மூன்று பேரில் நடுவில் வந்த சுந்தர புருஷரின் முகம் தங்கள் திருமுகம் போலிருந்தது. அது உண்மையா, இல்லையா என்பதைத் தாங்கள் தான் சொல்ல வேண்டும்."

இளவரசர் மதுராந்தகர், போதும் நிறுத்து! என்றார். அவருடைய குரலில் பீதி தொனித்தது. வந்தியத் தேவன் சும்மா இருந்தான். நீ நிமித்தக்காரனா?

"இல்லை ஐயா! அது என் தொழில் இல்லை. ஆனால் நடந்ததையும் சொல்லுவேன் இனிமேல் நடக்கப் போவதையும் சொல்லுவேன்."

மதுராந்தகர் சிறிது யோசித்துவிட்டு, "குதிரை மேல் நின்ற போது ஏதோ கத்தினாயே, அது என்ன?" என்று கேட்டார். "அபாயம் என்று கத்தினேன்." யாருக்கு அபாயம்? தங்களுக்குத்தான்! "என்ன அபாயம்?"

பல அபாயங்கள் தங்களைச் சூழ்ந்திருக்கின்றன. அது போலவே பெரும் பதவிகளும் காத்திருக்கின்றன. அவற்றைக் குறித்துச் சாவகாசமாகச் சொல்லவேண்டும். என்னுடைய கத்தியைக் கூடத் தான் தங்கள் வீரர்கள் பிடுங்கிக் கொண்டு விட்டார்களே? தங்களுடன் என்னைக் கோட்டைக்குள் அழைத்துக் கொண்டு போனால்."

"ஆகட்டும் என்னுடன் வா! சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம்!" மதுராந்தகத் தேவர் தம்முடன் வந்த வீரர்களின் தலைவனைக் கைகாட்டி அருகில் அழைத்தார். வந்தியத் தேவனைச் சுட்டிக்காட்டி அவனை அவர்களுடன் கோட்டைக்குள் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். அந்தக் கட்டளை அவ்வீரர் தலைவனுக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. ஆயினும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வந்தியத்தேவனையும் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் பழையாறைக் கோட்டைக் கதவு திறந்தது. மதுராந்தகத் தேவரும் அவருடைய பரிவாரங்களும் வந்தியத்தேவனும் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

### 16ஆம் அத்தியாயம்
### மதுராந்தகத் தேவர்

இந்தக் கதையில் ஒரு முக்கிய பாத்திரமாகிய மதுராந்தகத் தேவரைக் கதை ஆரம்பத்தில் கடம்பூர் மாளிகையிலேயே நாம் சந்தித்தோம். இன்னொரு முறை பழுவேட்டரையரின் பாதாள நிலவறைப் பாதை வழியாக நள்ளிரவில் அவர் அரண்மனைக்குச் சென்றபோது பார்த்தோம். அப்பொழுதெல்லாம் அந்தப் பிரசித்திபெற்ற இளவரசரை, பின்னால் பரகேசரி உத்தம சோழர் என்னும் பட்டப் பெயருடன் தஞ்சைச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கப் போகிறவரை நல்லமுறையில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. அந்தக் குறையை இப்போது நிவர்த்தி செய்து வைக்க விரும்புகிறோம்.

மதுராந்தகரைப் பற்றிச் சொல்லுவதற்கு முன்னால் அவருடைய பரம்பரையைக் குறித்தும் வாசகர்களுக்குச் சிறிது ஞாபகப்படுத்த வேண்டும். சுந்தரசோழ சக்கரவர்த்திக்கு முன்னால் சோழ நாட்டில் நீண்ட காலம் அரசு செலுத்தியவர் அவருடைய பெரிய தந்தை கண்டராதித்த சோழர். அவரும், அவருடைய தர்மபத்தினியான மழவரையர் மகள் செம்பியன்மாதேவியும் சிவபக்த சிகாமணிகள். சிவாலயத் திருப்பணிகளிலேயே தங்கள் வாழ்க்கையை அவர்கள் முழுவதும் ஈடுபடுத்திய வர்கள்.

தமிழ்நாடெங்கும் சிதறிக் கிடந்த தேவாரத் திருப்பதிகங்களைத் தொகுத்துச் சேர்க்கக் கண்டராதித்தர் ஆசை கொண்டிருந்தார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வெற்றி பெறுவது எப்படி?



ஞானமும், துணிவும் உறுதியும் கொண்ட அரசன் ஒரு நாட்டை ஆட்சி செய்து வந்தான்.

ஒரு நாள் அரசன் வேட்டையாடுவதற்காகச் சென்றான். அடர்ந்த காட்டில், அந்தணன் ஒருவன் வில்வப்பழங்களை வைத்துக் கொண்டு, யாகம் வளர்த்துக் கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த அரசன் அந்தணனை அணுகி, ஏதோ கேட்க எண்ணினான். பிறகு, எதுவும் கேட்காமலேயே திரும்பிச் சென்றான்.

வெகு நேரம் வேட்டையாடிவிட்டு, திரும்பினான் அரசன். அப்போதும் அந்தணன் மிகத் தீவிரமாக யாகத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டான் அரசன்.

அந்தணனை அணுகி, "இந்த வில்வப் பழங்களைக் கொண்டு நீ யாகம் செய்வதன் நோக்கம் என்ன? என்று கேட்டான் அரசன்.

அக்கினி தேவன் எனக்குக் காட்சி அளித்து வரம் அளிப்பதுடன் யாககுண்டத்திலிருந்து ஒரு தங்க வில்வப் பழமும் கிடைக்கும். அதற்காகவே காலையிலிருந்து யாகம் செய்து கொண்டிருக்கிறேன். காட்சியும் கிடைக்கவில்லை காரணமும் தெரியவில்லை" என ஏக்கத்தோடு கூறினான் அந்தணன்.

"அப்படியானால் ஒரு வில்வப் பழத்தை என்னிடம் கொடு உனக்காக நான் யாகத்தில் ஈடுபடுகிறேன் என்றான் அரசன்.

அதற்கு அந்தணன், மிக அலட்சியமாக மனத்தூய்மையும், பக்தியும் இருந்தால்தான், அக்கினி தேவனைக் காண இயலும். புனிதத்துடன் பக்தியுடன் காலையிலிருந்து தவம் இருக்கிறேன். எனக்கே காட்சி கிடைக்கவில்லை, உனக்கு மட்டும் எவ்வாறு கிடைத்து விடும்? என்று கர்வத்துடன் கூறினான்.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம், என்னிடம் ஒரு பழத்தைக் கொடு" என்று கேட்டுப் பெற்றுக் கொண்டான் அரசன்.

மனதை ஒரு நிலைப்படுத்தி, (வேறு எண்ணங்களில் சிதற விடாமல்) அக்கினி தேவனே! இதோ இந்த வில்வப் பழத்தை உனக்கு அளிக்கிறேன் உனக்குக் கருணை உண்டாக வில்லை என்றால், என் தலையை உனக்கு அளிக்கப்போகிறேன்.

( தொடரும்..)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன் மனதையும், புத்தியையும் அன்பு மற்றும் பரிவோடு ஆளத்தெரிந்தவரே பிறரை வழி நடத்தத் தகுதியானவர்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இரு கூட்டு மருந்து முக்கூட்டு மருந்தாயிற்று

இலங்கைத் தமிழரசுக் கட்சியை கந்தறுத்து சின்னாபின்னமாக உடைத்த ஸ்ரீமான் சம்பந்தர் அவர்களின் ஆத்மா நிச்சயம் சாந்தியடைந்திருக்கும்.

விடுதலைப் புலிகளைப் பழிதீர்க்க வேண்டும் என்ற ஆழ்மனப் பதிவோடு செயலாற்றிய இரா.சம்பந்தர், விடுதலைப் புலிகள் இல்லாத காலத்திலும் புலிகளை வஞ்சிக்க வேண்டும் என்ற நினைப்போடு இருந்ததன் காரணமாக தமிழ் மக்கள் வஞ்சிக்கப்பட்டனர் என்பதுதான் உண்மை.

என்ன செய்வது எல்லாம் நம் தலைவிதி என்றால்; நீண்ட நெடுங்காலம் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி இப்போது பிரிவுபட்டு நிற்பதைப் பார்க்கும்போது, தமிழ்ப்பற்றுள்ள எவரும் நிச்சயம் வேதனை கொள்வர்.

தவிர, இன்னமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனப்பாங்கு, சில தமிழ் அரசியல் வாதிகளிடம் இருப்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாமல் போயாயிற்று.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் மீது கொண்ட காழ்ப்புணர்வை இன்னமும் பகையாகக் கொண்டால், அஃது தமிழ் மக்களையே வஞ்சிக்கும் என்ற உண்மையை அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமது ஆதரவு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு எனக் கருத்துரைத்துள்ளார்.

அதேநேரம் அந்த முடிவு தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தமது ஆதரவு தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு எனத் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜா; ஜனாதிபதித் தேர்தலில், ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் (07) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாவிட்டபுரத்திலுள்ள மாவை சேனாதிராஜாவின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தார்.

அந்தச் சந்திப்பால் நெகிழ்ந்த மாவை சேனாதிராஜா; நாட்டின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும். அவர் வெற்றி பெறுவார். அவ்வாறு வெற்றி பெறும் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதுடன் தமிழர் பகுதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆக, இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முக்கூட்டுத் தலைவர்களான சிறீதரன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் முக்கூட்டு வேட்பாளர்களை ஆதரிக்கின்றனர்.

இதில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிப்பதாகக் கருத்து வெளியிட்ட மாவை சேனாதிராஜாவை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவிட்டபுரத்திலுள்ள அவரின் வீட்டுக்குச் சென்று சந்தித்ததன் மூலம், இரு கூட்டு மருந்தை முக்கூட்டு மருந்தாக மாற்றியுள்ளார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சட்டத்தினூடாக நியாயத்தை பெற்றுக்கொடுப்பேன்

## ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ உறுதி

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க சட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை உருவாக்கியுள்ளேன். தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த நிலையான திட்டங்களை செயற்படுத்துவேன் என தேசிய ஜன நாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர்களுக்கிடையிலான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க பல நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். காணாமல் போனோர் அலுவலகத்தை அமைத்தோம். காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை வெகு விரைவில் நிறைவு செய்ய சட்டத்தால் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளேன். நிலையான தீர்வுக்கு உரிய நடவடிக்கைகளை செயற்படுத்துவேன் என்றார். (ந-7)

# ரணில் - அநுர டீல் வலுவானதாக உள்ளது

## விமல் வீரவன்ச காட்டம்

(கொழும்பு)

ரணில் - அநுர டீல் அரசியல் இன்று வலுவானதாகக் காணப்படுகிறது. ஒருமித்த நாடு என்ற புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நாங்கள் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். சிலாபம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசியத்தைபாதுகாப்பதற்காகவே குறுகிய காலத்தில் சர்வஜன சக்தி என்ற புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபித்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடுகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க , அநுர குமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ ஆகியோரின் கொள்கைப் பிரகடனத்தின் உள்ளடக்கம் ஒருமித்ததாக காணப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறார். ரணில் - அநுர டீல் அரசியல் இன்று வலுவானதாக காணப்படுகிறது. தேசிய மக்கள்சக்தியின்கொள்கை பிரகடனத்தை கின்னஸ் சாதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஒருமித்த நாடென்பதைமுன்னிலைப் படுத்தி தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக அநுர குமார திஸாநாயக்க தனது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கு அநுரகுமார திஸாநாயக்க முன்னின்று செயற்பட்டார். ஆகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அநுரகுமார திஸாநாயக்க ஒருபோதும் செயற்படமாட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக் காலமாக அநுரகுமார திஸாநாயக்கவை முன்னிலைப்படுத்தி பேசுவதை அவதானிக்க முடிகிறது. அநுரகுமார தலைமையில் அரசாங்கத்தை உருவாக்கி, பங்களாதேஸ் நாட்டின் தற்போதைய நிலைமையை தோற்றுவித்து அரசியலமைப்புக்கு முரணாக மீண்டும் அதிகாரத்துக்கு வரவே ஜனாதிபதி ரணில் முயற்சிக்கிறார். அதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றார். (ந-7)

# கல்வி முறைமை மாற்றப்படும்

## நாமல் தெரிவிப்பு

உலக தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் எமது நாட்டின் கல்வி முறை மாற்றியமைக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு சுபீட்சமான உலகைக் கட்டியெழுப்பவே மக்களைப் பாதுகாத்து எமது அரசியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றோம்.

இந்த நாட்டில் வர்த்தகர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த நாட்டின் பொருளாதாரம் கிராமத்தில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளாலேயே இடம்பெறுகிறது.

அவர்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வரி விதிக்கப்பட வேண்டும்.

கல்வி முறையில் மாற்றம் வர வேண்டும். உலக வேலைவாய்ப்பு சந்தைக்கு ஏற்றவாறு நம் நாட்டின் கல்வி முறை மாற்றப்படும். நாடு நிலையான பொருளாதார வளர்ச்சியை அடையாமல் வரிகளை விதித்து இந்த நாட்டில் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்றார். (ந-7)

# யுத்தத்தை விடக் கொடியது பொருளாதார நெருக்கடி

## பிரதமர் தினேஸ் குணவர்தன

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு கண்ட நெருக்கடியையுத்த காலத்தில்கூடக் கண்டிருக்கவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மத்துகம தனியார் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு அனுபவித்த நெருக்கடியை யுத்த காலத்தில்கூடக் கண்டிருக்கவில்லை. அந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தபோது எதிர்க்கட்சித் தலைவர்கள், அதற்கும் ஆதரவளிக்கவில்லை.

ஆனாலும் நெருக்கடிகளைத் தீர்த்து சுமூகமான நிலையை ஏற்படுத்தும் இயலுமையும் அனுபவமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இருந்தது. அதனாலேயே அவரிடம் நாட்டின் ஆட்சியை ஒப்படைக்க நாங்கள் தீர்மானித்திருந்தோம் என்றார்.

(ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

07

தடைகள் சமநிலைகள் முறை ஒவ்வொரு துறையும் சுயாதீனமாக செயற்படுகின்ற அதேவேளை தமது எல்லைகளைத் தாண்டிச் செயற்படுவதை தவிர்க்கக் கூடியதாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் ஜனாதிபதி அரசியல்யாப்பின் மூலம் பெற்ற அதிகாரங்களை விட தற்போது கூடுதலான அதிகாரங்களைப் பெற்றிருப்பதனால் தடைகள், சமநிலை முறை சிறப்பாக செயற்படுவதில்லையென்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது.

மாநிலங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு உள்ளூராட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பினும் இறையாண்மை இல்லை. மாவட்டக் கட்டமைப்பு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. மாநில அரசுகளுக்கு மக்கள் அதிகாரம் வழங்குகின்றனர். தங்களுக்கான அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டுள்ளன. இவை அனைத்துமே மக்களாட்சித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை.

ஒவ்வொரு மாநில அரசிற்கும் மூன்று பிரிவுகள் உள்ளன. ஆளுநர் (நிர்வாகம்), மாநில சட்டப் பேரவை (சட்டவாக்கம்), மாநில நீதிமன்றம் (நீதி பரிபாலனம்). ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் கீழ் மாநிலங்களுக்கு பல அதிகாரங்களும் உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களை ஏற்கும் அதிகாரமும் இவற்றில் ஒன்றாகும். பொதுவாக, உள்ளக சட்ட ஒழுங்கு, பொதுக் கல்வி, பொதுச் சுகாதாரம், உட்கட்டமைப்பு, உள்ளக போக்குவரத்து மற்றும் மாநிலங்களிடையேயான வணிகக் கட்டுப்பாடு ஆகியவை மாநிலங்களின் பணிகளாகவும் பொறுப்புகளாகவும் கருதப்படுகின்றன.

இருப்பினும் தற்காலத்தில் இவற்றில் கூட்டரசு கணிசமான அளவில் முதலீட்டை செய்துவருவதுடன் கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றது. காலவெள்ளத்தில் அமெரிக்க அரசியலமைப்பு திருத்தப்பட்டு வந்துள்ளது. அதன் பயன்பாடும் புரிதலும் மாறியுள்ளது. பொதுவாக மையப்படுத்தலை நோக்கிய பயணமாக இது உள்ளது. மாநிலங்களின் உரிமைகள் குறித்து தொடர்ந்து உரையாடப்பட்டு வருகின்றது.

மாநிலங்களும் அவர்களின் குடிகளும் கூட்டரசின் பேராயத்தில் அங்கம் பெறுகின்றனர் செனட் மற்றும் கீழவை என்ற ஈரவைகளைக் கொண்ட சட்டமன்றத்தில் (காங்கிரஸில்) ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரண்டு செனட்டர்களும் குறைந்தது ஒரு கீழவை உறுப்பினரும் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

கீழவையில் கூடுதல் உறுப்பினர்கள் அந்த மாநிலத்தின் மக்கள் தொகையை பொறுத்து வழங்கப்படுகின்றது. இதற்காக பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு அரசியலமைப்பின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடந்த கணக்கெடுப்பில் மாநிலத்தின் விகிதாசாரத்தின்படி உறுப்பினரிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

தவிரவும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அமெரிக்கக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர் பிரதிநிதிகள் (electors) குழுவிற்கு தங்கள் மாநிலத்தின் செனட்டர்கள், கீழவை உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு இணையான தேர்வாளர் பிரதிநிதிகளை (electors) தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது. இதுபற்றி முன்னர் ஒரு கட்டுரையில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**அடுத்ததாக சுவிட்சர்லாந்து அரசியல் அமைப்புப் பற்றிப் பார்ப்போம்**

### சுவிட்சர்லாந்து நாடும் மண்டலங்களின் (cantons) உருவாக்கமும்

உலகிலுள்ள ஜனநாயக அரசியல் முறைமைகளில் தனித்துவமும் சிறப்புமிக்க ஒன்றாக சுவிட்சர்லாந்து திகழ்கிறது. அந்நாட்டின் பொருளாதாரம், வாழ்க்கைத்தரம் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு போன்றன எவ்வாறு சர்வதேச அளவில் புகழ் பெற்றிருக்கின்றனவோ அவ்வாறே அதன் அரசியல்முறைமையும் அமைந்திருக்கிறது.

முன்பு இது ஒரு கூட்டமைப்பு. ஆனால், 1848 முதல் ஒருங்கிணைந்த தனி நாடானது. தற்போது மண்டலங்கள் (Cantons) என அழைக்கப்படும் 26 மாநிலங்களைக் கொண்ட 'கூட்டாட்சிக் குடியரசு' ஆகும்

சட்டத்துறை, நிறைவேற்றுத் துறை மற்றும் நீதித்துறைக் கட்டமைப்புக்களும் அவற்றுக்கிடையேயான அதிகார உறவுகளும், கூட்டாட்சி முறையில் மத்திய மாநில மற்றும் உள்ளூர்மட்ட அரசியல் அலகுகளுக்கிடையேயான அதிகாரப் பிரிப்பும் அவற்றுக்கிடையேயான உறவுகளும், சாதாரண குடிமக்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்கள் என்பனவும் சுவிட்சர்லாந்தின் அரசியல் முறைமையை தனிச் சிறப்புமிக்கதாக ஆக்கியிருக்கின்றன.

அமெரிக்காவில் உள்ளது போல மத்திய• அரசின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, மிகுதி மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதுவன்றி சில காரியங்களில் மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் ஒத்த அதிகாரம் வழங்கப்பெற்றுள்ளது. ஆனால், இக்காரியங்களில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரமே மாகாண அரசினுடையதை விட மேம்பாடு உடையதாக இருக்கும் .

இன்னென்ன செய்யலாம் என்று அரசியல் அமைப்புக் கூறுவது போல, இந்த இந்தக் . காரியங்களில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்பதையும் வரையறுத்திருக்கிறது. "மாகாணங்களிலிருந்து எந்த ஒரு மனிதனையும் அது வெளியேற்றக் கூடாது. மதம் காரணமாகவே சலுகைகள் அளிக்கப்படுவதோ, மறுக்கப்படுவதோ கூடாது. யாரையும் மதக்காரியங்களில் கட்டுப்படுத்த முடியாது. மண நிகழ்ச்சிகளை மதம் காரணமாகவோ, ஏழ்மை காரணமாகவோ, அரசாங்கம் தடுக்க முடியாது." என்பன அவற்றுள் சில.

அதுமட்டுமன்றி, சமுதாய ஒற்றுமைக்கு அடிப்படைத்தேவைகள் எனக்கருதப்படும் ஒரேமொழி, ஒரே மதம், ஒரேஇனம் என்ற பண்பாடுகள் இல்லாமலே ஒரு நாடு இருக்க முடியும் என்ற உண்மைக்குக் கூட சுவிட்ஸர்லாந்து எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

மேற்கு ஐரோப்பாவின் மத்தியில் பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ள சுவிட்சர்லாந்தானது 21,298 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. (இலங்கை 65,630 சதுர கிலோமீற்றர்) 86.38 இலட்சம் (2020 தரவின்படி) மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் இந்நாடு இன, மொழி, மத ரீதியாக பல பிரிவுகளைக் கொண்டுள்ளது.

சுவிஸ் குடிமக்கள் ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலியன், ஒஸ்ரியன் ஆகிய நான்கு இனங்களின் பூர்வீகத்தைக் கொண்டவர்கள். இவர்களில் 63.3 வீதமானோர் ஜேர்மன் மொழியையும் 28.7 வீதமானோர் பிரான்ஸ் மொழியையும் 8.1 வீதமானோர் இத்தாலிய மொழியையும் 0.8 வீதமானோர் ரொமன்ஸ் (Romansh) எனும் ஒரு வகை திசை மொழியையும் பேசுகின்றனர். ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலியம் மற்றும் ரொமன்ஸ்? (Romansh) என்பது தேசிய மொழிகளாகும். நாட்டில் பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலிய, ரோமன்ஷ் பண்பாடுகள் வழக்கத்திலுள்ளன.

2020 காலப்பகுதி கணிப்பீட்டின்படி சுவிஸ் மக்களில் 34.4 வீதமானோர் ரோமன் கத்தோலிக்கத்தையும் 22.5 வீதமானோர் புரட்டஸ்தாந்து (சீர்திருத்தம்) மதத்தையும் 5.7 வீதமானோர் ஏனைய கிறிஸ்தவர்களாகவும் 25.4 வீதமானோர் எந்த மதத்தையும் சாராதோர் எனவும் 5.4 வீதமானோர் இஸ்லாத்தையும் 0.6 வீதமானோர் இந்து சமயத்தையும் ஏனையோர், பௌத்தர்கள், யூதர்கள் எனபல மதங்களைப் பின்பற்றுபவர்களாக தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர். சுவிட்சர்லாந்து அதிகாரப்பூர்வ தேசிய மதம் எதையும் கொண்டிருக்கவில்லை.

ஆங்கிலம் ஒரு அதிகாரபூர்வ மொழியாக இல்லாவிட்டாலும் அது சில சமயங்களில் பல அதிகாரப்பூர்வ ஆவணங்களில் ஒரு மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், 5.2% (கிட்டத்தட்ட அரை மில்லியன்) மக்கள் பெரும்பாலும் வெளிநாட்டவர்கள் - ஆங்கிலத்தை முதல் மொழியாகப் பேசுகிறார்கள். மேலும் ஐந்தில் ஒரு பகுதியினர் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் பேசுகிறார்கள்

இவ்வாறு சுவிட்சர்லாந்தின் சமூகக் கட்டமைப்பு பல்லினத் தன்மை மிக்கதாக உள்ளபோதும் சுவிஸில் தேசிய ஐக்கியமும் தேசிய ஒருமைப்பாடும் பலமாக கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. சுவிட்சர்லாந்தின் தாராளமான குடியேற்றக் கொள்கை காரணமாக சுவிஸ் குடிமக்களில் சுமார் 20 வீதமானோர் வெளிநாட்டுக் குடியேறிகளாக உள்ளமை மற்றொரு சிறப்பம்சமாகும்.

சுவிஸ் நாட்டின் மொத்த நிலப் பரப்பில் சுமார் 60 வீதமான பகுதி விவசாயத்திற்கு பொருத்தமற்ற மலைப்பிரதேசமாகவும் (பெரும்பான்மையாக அல்ப்ஸ் மலைத் தொடர்) சுமார் 30 வீதமான பகுதி வனாந்தரமாகவும் உள்ளது. மிகச் சொற்ப அளவே குடியிருப்புக்கும் (7.8 வீதம்) விவசாயத்திற்கும் (35.9 வீதம்) பொருத்தமான நிலத்தைக் கொண்டுள்ளது.

இதனால், சுவிட்சர்லாந்து தன் உணவுத் தேவைக்கு அதிகம் இறக்குமதியையே நம்பியுள்ளது. தவிர மிகவும் குறைந்தளவிலேயே கனிய வளங்களைக் கொண்டுள்ளதனால் தன் இருப்பை ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலேயே தக்கவைத்துள்ளது. ஆனாலும், பல்வேறுபட்ட வேற்றுமையிலும் வளப்பற்றாக் குறையிலும் கூட தமது பலமான ஒற்றுமையினால் கைத்தொழில் நுட்பத்தை முறையாகப் பயன்படுத்தி இன்று உலகின் முன்னணி கைத்தொழில்மய நாடாக சுவிஸ் மக்கள் தமது நாட்டை உயர்த்தியுள்ளார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடலில்...

இரவு கடற்றொழிலுக்காக மூன்று மீனவர்கள் படகில் சென்று மன்னார் கடற்பகுதியை அண்டிய பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர்

அதன்போது, ஒருவர் தனக்கு நெஞ்சு வலிப்பதாகக் கூறி படகினுள் இருந்துள்ளார்.

அதனையடுத்து படகினைக் கரைக்கு கொண்டுவந்து, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் அவருடன் தொழிலுக்கு சென்ற ஏனைய இரு மீனவர்களிடமும் வாக்குமூலங்களை பெற்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,285)

## ரணிலுக்கு...

கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து குறித்த நபர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் சிலிண்டரைக் கட்டிக் கொண்டு அதனை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள் பேரணியாகச் செல்வதற்குத் தயாராக இருந்துள்ளனர்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரிகள் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் மோட்டார் சைக்கிள்களை சோதனையிட்டபோது தேர்தல்பதாதைகள் காணப்பட்டுள்ளன.

அதனையடுத்து குறித்த நபர்களிடம் இருந்த துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சிலிண்டர், மோட்டார் சைக்கிள் என்பவற்றைப் பொலிஸார் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ந-7,250)

## வட்டியில்லா...

வரை சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதிகபட்சமாக பதினைந்து லட்சம் ரூபாய் வரை ஐந்து பிரிவுகளின் கீழ் கடன் பெறலாம் என்றும் பதினெட்டு உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப் படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## ஜனாதிபதித்...

வீட்டிற்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாவை சேனாதிராஜா, ஜனாதிபதியுடனான சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரங்கள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வெற்றி வெற்றி வேண்டும். அவரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாரிய பொறுப்பு உள்ளது என அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாகவும் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக தீர்மானித்ததோடு அதனை நாம் ஏற்பதாக மாவை சேனாதிராசா தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அநுரவின்...

பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் தார்.

முன்னதாக தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில், அநுரவை இனவாதியாக சித்தரித்திருந்தார். இக்கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் உரையாற்றியபோது மாற்றம் தொடர்பிலும், தெற்கிலே மக்கள் மாற்றமொன்றை ஏற்படுத்தும் வேளையில் வடக்கு மக்கள் அதற்கு ஆதரவாக மற்றும் பங்காளிகளாக இல்லாமல் இருக்கிறார்கள் என்றொரு கருத்தைக் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற போதும் இவ்வாறானதொரு கருத்தைக் கூறியிருந்தார்.

அதாவது வடக்கு மக்கள் பங்குதாரர்களாகத் தன்னோடு இருந்திருக்கவில்லையென கவலைப்பட்டார். ஆனால் அவரை வெற்றி பெறச் செய்த மக்களே விரட்டியடித்தார்கள். அப்பொழுது தெரிந்திருக்கும் வடக்கு மக்களுடைய பார்வை சரியானதென்று.

தோழர் அநுர குமார இந்த வார்த்தைகளை இனவாத உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் கூறியதாக நான் நினைக்கவில்லை. எனக்கும் அவரை நன்றாகத் தெரியும். அவர் அப்படிப்பட்ட ஒருவர் அல்ல.

உண்மையில், இந்த நாட்டில் இனவாதத்தை ஒழிப்பதில் அவர் மிகுந்த அக் கறை கொண் டுள்ளார்.

எனவே, இந்த விடயத்தில் எங்களுக்கு வேறுபட்ட உணர்வுகள் இல்லை" என்றார்.

அதேவேளை, எதிர்வரும் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு தமிழரசுக் கட்சி ஆதரவளிப்பதை மீண்டும் உறுதிப்படுத்திய சுமந்திரன் அநுர குமார வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும் அவர் ஏற்படுத்த விரும்பும் மாற்றங்களுக்காக அவருடன்இணைந்து செயற்படத் தயார் என்றும் கூறினார். (ந-7)

## இந்தி...

கொள் முதல் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும், முட்டை இறக்குமதிக்கான விண்ணப்பங்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அரச வர்த்தக பல்வேறு சட்ட ரீதியான கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர உறுதிப்படுத்தியுள்ளார். (ந-7)

## வாக்கு...

தனது வாக்குச் சீட்டை கையடக்கத் தொலைபேசியூடாக புகைப் படம் எடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த சம்பவம் இடம்பெற்ற தபால் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய டிப்போ உப முகாமையாளர் மூதூர் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வழக்குத் தாக்கல் செய்ய பணிப்புரை கிடைக்கும் வரை சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர் . (ந-7)

## காணாமல்...

ஜெனிவாவுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு இவர்கள் முக்கிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதுடன் பல கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள வுள்ளனர். (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2024.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 5590
R 5 5 1 0 0 0
அத சம்பத
R 1 0 0 0
சீட்டிழுப்பு இலக்கம் 165
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1620
R 06 08 20 43 R
Double Chance 63013

மெகா பவர்
திகதி 08/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1938
T 26 13 25 32 35
30071

லக்கி 7 VIP
திகதி 2024.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 416
H 6 4 0 3 5 7 H

சீட்டிழுப்பு இலக்கம் 3832
சீட்டிழுப்பு திகதி 08.09.2024
C 06 28 48 56
C 91854

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 0899
கடகம் 09 33 41 54 கடகம்
25214 27

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.09.2024 வெற்றி வாரம் 298 வர்ணம் பழுப்பு
T 0 7 7 9 0 3
46325
ரூ.21,640,780.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2564 ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 08.09.2024 தினம் ஞாயிறு
05 30 38 44 M
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.56,586,885,60
DLB

சனிதா
திகதி 2024.09.08 வெற்றி வாரம் 4725
25 48 59 61 I
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.50,318,326.80
06621
DLB

சசிரி
வெற்றி வாரம் 526
சீட்டிழுப்பு திகதி 2024.09.08
கபிலம்
02 24 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,152,640/-
DLB

சீட்டிழுப்பு வாரம் 4276 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.09.08 தினம் ஞாயிற்றுக்கிழமை
17 19 23 24 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 6,841,908.00
106074
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 34 09 32 51 52
1740
மஞ்சள்
08.09.2024
ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 543,764,463.00
DLB

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2390
சீட்டிழுப்பு திகதி : 2024.09.08
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.65,306,564.80
08 20 47 66 P
789795
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் செயலாளராக விரும்புகிறார் ரணில்

## சஜித் சாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், அநுரகுமாரவின் பிரத்தியேக செயலாளராவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விருப்பப்படுகின்றார்.

தற்பொழுது ஜனாதிபதியும் அநுரகுமாரவும் ஒன்றாக இணைந்து என்னைத் தோல்வியடையச் செய்வதற்காகப் பணத்தை செலவிடுகின்றார்கள்.

யார் எதைச் செய்தாலும் மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

200 வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றைக் கொண்ட தோட்டத் தொழிலாளர்கள் வியர்வை சிந்தி, கண்ணீர் வடித்து, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு வழங்குகின்ற ஒத்துழைப்பை மறக்க முடியாது.

அவர்களின் பக்கபலம் குறித்து நாம் பெருமைப்பட்டு அவர்களுக்கு நன்றி கூறி கௌரவப்படுத்துகின்றோம்.

அத்தோடு இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் அவர்களைச் சமமான முறையில் ஏற்றுக் கொள்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களுக்குக் காணி மற்றும் வீட்டுக்கான உரிமை வழங்கப்பட்டு, பெருந்தோட்ட நெடுங்குடியிருப்புக்கு பதிலாகத் தனிக் கிராமங்களை அமைத்துக் கொடுப்பதற்கான அடித்தளம் இடப்படும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ந-7)

# தேர்தலைப் புறக்கணிக்குக நாவற்குழியில் பிரசாரம்

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - நாவற்குழிப் பகுதியில் நேற்று (08) பிற்பகல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்குத் தமது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தியிருந்தனர். (ந-7)

# வட்டு.வில் வாகன விபத்து இளைஞன் படுகாயம்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பாலத்திற்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதன் போது அராலி கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த லோகேநாதிரம் கஜேந்திரன் (வயது 29) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

நேற்றிரவு ஓட்டுமடம் பகுதியில் வட்டுக்கோட்டை நோக்கி வந்த ஹயஸ் ரக வாகனம் வீதியைக் கடக்க முற்பட்ட இளைஞன் மீது மோதியது.

இதன்போது குறித்த இளைஞனின் தலையில் அடிபட்டு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# சண்டிலிப்பாயில் இன்று உணவுத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் நடாத்தப்படும் பாரம்பரிய உணவுத் திருவிழா இன்று திங்கட்கிழமை (09) காலை-09 மணி தொடக்கம் மாலை-04 மணி வரை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாரம் பரிய உணவுகளான தோசை, அப்பம், ஒடியல் கூழ், குரக்கன் ரொட்டி, பலகார வகைகள், பழங்கள், இளநீர், தானிய வகைகள் மற்றும் மதிய உணவுகள் முயற்சியாளர்களால் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு பார்வையிடுவதுடன் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து ஊக்குவிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந-7)

# சிற்பனையில் இன்று தேர்

(வேலணை)

வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலயத் தேர்த் திருவிழா இன்று இடம் பெறவுள்ளது.

நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும். (ந-7)

# செம்மலைக் கிணற்றில் வீழ்ந்த யானைக்குட்டி



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செம்மலை புளிய முனை கிராமத்தில் உள்ள பாரிய கிணற்றில் வீழ்ந்த யானைக் குட்டியை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

காட்டுயானைக் குட்டி ஒன்று கிணற்றில் விழுந்திருந்ததை கண்ட மக்கள் கிராம அலுவலருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த யானைக்குட்டியினை மீட்கும் பணியில் கிராம அலுவலர், கிராம மக்களுடன் இணைந்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (ந-7)

# தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவிக்கு இன்று மஞ்சம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவந்தனில் இன்று திங்கட்கிழமை திருமஞ்சத் திருவிழா இடம் பெறவுள்ளது.

மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து துர்க்கை அம்மன் மஞ்சத்தில் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார். (ந-7)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 110 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
❖ யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
❖ அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை.
❖ சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்.
❖ பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
❖ நன்னீர் ஊற்று நிலம்.
❖ 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ சீரான ஆவணங்கள்.
❖ யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்.
பார்வையிடும் நேரம்
காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு:
077 623 4204 / 077 030 2523
(1688)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1144)
076 825 7716 (ஆகாஸ்)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1146)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1146)

வேலையாட்கள் தேவை
பருத்தித்துறையில் இயங்கும் லோன்றி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
நாள் சம்பளம் 3000.
தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு;
076 260 5538
(325)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 27 684
(304)

இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(326)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

யாழ். சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும் யாழ். நல்லூர் கோவிலுக்கண்மையில் 10 பரப்புக் காணியும் யாழ். கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கண்மையில் நாவலர் வீதி முகப்புடன் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
(1892)
077 723 2535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.